



– வாழ்வோம்

# புதையல் 1

**ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிராகத் தொடங்கிய திராவிட இயக்கத்தின் வரலாற்றில், இதழ்களுக்கு எப்பொழுதுமே தனித்துவமான இடம் இருக்கிறது. தமிழ் இதழியல் சூழலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி, எல்லாக் காலமும் தமிழுக்காகவும் தமிழ்நாட்டிற்காகவும் நின்ற திராவிட இயக்க இதழ்களில் வெளியான சிறப்புமிக்கவைகள் இந்தப் பகுதியில் இனி...**

## முரசு ஒலிக்கிறது




திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்ட மூன்று பெரும் போராட்டங்கள், முடிந்தும் முடியாமலும் இருக்கின்றன. கழகத்தின் கண்ணியத்தைக் காயப்படுத்தும் நோக்குடன், கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் வழக்கு. கண்ணதாசன், தருமலிங்கம், நடராசன் ரத்தினம் முதலானோர் குற்றவாளிக் கூண்டில். இந்நிலையிலே 'முரசொலி' வெளிவருகிறது. 'கல்வித் திட்டம் – அதைத் திரும்பப் பெற முடியாது. கல்லக்குடி – அந்தப் பெயரை அதிகாரபூர்வமாக அளிக்க இயலாது. காட்டுமிராண்டி – வடக்கேயிருந்து வரும்போதெல்லாம் இப்படி வாழ்த்திக் கொண்டே தானிருப்போம். கேட்டால், தோட்டா பேசும்' என்று ஆணவம் பேசிய ஆச்சாரியார், சிம்மாசனத்தில் இருந்து இறங்குகிறார். திராவிடத்தின் அரசியலிலே ஒரு மாறுதல். இந்த மாறுதல், நமது கழகத்தின் போராட்டங்களை அனுதாபத்தோடு கவனிக்கக்கூடிய நல்ல மாறுதலாக இருக்குமா? என்று திராவிடம் ஆவலோடு எதிர்பார்க்கிறது. 'மாறுதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தி.மு.கழகம் உயர்த்திப் பிடித்த இரு வண்ணக்கொடி – இனி இறுதி வெற்றிபெறும் வரையில், தணியப் போவதில்லை. கொடுங் கோலரை வீழ்த்திடக் கொட்டப்பட்ட போர் முரசும் நின்றிடப்போவதில்லை. போர்! போர்! என்று அறிவித்தாகி விட்டது! முரசொலி கேட்குது! முன்னணி அமையுது – புலியே! புயலே! எழுந்திரு!' என முன்னேற்றக் கழகம் வீட்டுக்கொரு வீரரை அழைத்தாகி விட்டது. 'தோளை உயர்த்து! சுடர் முகம் தூக்கு! தோழனே; தொல்லைப்படும் சமுதாயத்தைத் தூக்கி நிறுத்து!' என விருத்தம் பாடியாகிவிட்டது.

இந்த நல்ல நேரத்திலே நாட்டை நமக்காக்கும் களம் அமைந்துவிட்ட வேளையிலே – 'முரசொலி' வருகிறது! இன உரிமைப் போரிலே ரத்தச் சகதியில் தங்கள் உயிரை மலரவிட்ட உத்தமர்களின் புகழ் பாடியபடி 'முரசொலி' வருகிறது! தாயகத்தின் விடுதலைக்காக அங்கங்களை அறுத்துக் கொடுத்த தங்கங்களின் பெருமை கூறியவாறு முரசொலி வருகிறது! சிறைப்பட்டோர் – சித்ரவதைப்பட்டோர் – சிங்காரப் பொன்னாடு காக்க, சிரம் தரவும் ஒருப்பட்டோர் – அனைவருக்கும் வணக்கம் செய்து 'முரசொலி' வருகிறது! அதோ, அழகிரியின் கல்லறை, தொண்டின் மேன்மை கூறுகிறது! வேலாயுதம் சமாதி, வீரத்தின் லட்சணம் தெரிவிக்கிறது! மஜீதின் புதைகுழி, தியாகத்தின் சின்னமாகச் சிரிக்கிறது! வட சென்னை பாண்டியனின் சவமேடு, வாழ்வின் லட்சியம் போதிக்கிறது! தாளமுத்து நடராசன் பிரதே மண்டபம், தமிழ்ப் பண்பைப் பாடுகிறது! லால்குடி நடராசன் பிண மாளிகை, இன முழக்கம் புரிகிறது!

விடுதலை கீதம் இசைத்திடும் வீணையிலே எத்தனை வீரர்களின் நரம்புகள் இணைக்கப்படுகின்றன என்பதற்கு இவைகள் எடுத்துக் காட்டுகள்.

> **"வாழ்க இந்த ஏடு" என்று நீங்கள் வாயால் மனமார வாழ்த்துவது, நமது காதில் விழுகிறது. அது இன்பத்தைப் பொழிகிறது - இலட்சிய வெறி ஏற்றுகிறது! வாழ்க வளமார் எமது திராவிட நாடு!**


அத்தகைய இலட்சியப் படையை ஊக்குவிக்கும் பணியிலே முரசொலியும் பங்குபெறுகிறது; தாயகத்தை மீட்க – என்றும், என எண்ணும்போது, புதிய உவகை பூக்கத்தான் செய்கிறது!

முரசு ஒலித்திருக்கிறது – முதல் ஒலியை நீங்களும் இப்போது கேட்கிறீர்கள். முதல் இதழ், உங்கள் பொன்னான கரங்களிலே மின்னுகிறது. "வாழ்க இந்த ஏடு" என்று நீங்கள் வாயால் மனமார வாழ்த்துவது, நமது காதில் விழுகிறது. அது இன்பத்தைப் பொழிகிறது – இலட்சிய வெறி ஏற்றுகிறது! வாழ்க வளமார் எமது திராவிட நாடு!

(முரசொலி தலையங்கம், 02.04.1954)

● **பாரத் ஸ்ரீமன் அழகேசன்** ●

# கலகக்காரர் தலைஞர் 01




■ எழுத்து: மகிழவன்,
ஏஐ உருவாக்கம்: ஆரிஃப் முகம்மது

# ஃப்ளாஷ்பேக்



## உடன்பிறப்புகளின் தாயுமானவர்!

2014–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி, எனது பிறந்த நாள் அன்று, தலைவரிடம் வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். நெல்லை அரசு சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நான், தலைவரிடம் வாழ்த்துப் பெற என் தம்பி சாண்டில்யனுடன் சென்றிருந்தேன். தலைவர் அவர்கள் என்னைப் பார்த்து, "என்னய்யா... பிறந்தநாளா?" என்றார். "ஆமாம் தலைவரே" என்றேன். "என்ன படிக்கிறாய்?" என்று கேட்டார். "நெல்லை அரசு சட்டக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துவருகிறேன் தலைவரே" என்றேன். புருவத்தை உயர்த்தி, "நெல்லையா?" என்றார். "ஆமாம் தலைவரே" என்றேன். வாழ்த்தினார்... வணங்கினேன். என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த விலை மதிப்பில்லாத பரிசு, அவர் வாழ்த்து!


விக்னேஷ் உதயன்

– **வழக்கறிஞர் விக்னேஷ் உதயன்,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**கழக மாணவர் அணி, திருவள்ளூர் கிழக்கு.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# தெரிந்து கொள்வோம்

**1916** – `தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற புதிய கட்சி உருவானது.

**1917** – ஆகஸ்ட் 19 கோவையில், பனகல் அரசர் தலைமையில் `நீதிக்கட்சி மாநாடு' நடைபெற்றது.

**1919** – ஜூலை 17-ஆம் நாள், திடீரென டாக்டர் நாயர் லண்டனில் மரணம்.

**1920** – முதல் மத்திய, மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

**1920** – சென்னை மாகாணத் தேர்தலில், நீதிக்கட்சி மகத்தான வெற்றி.

**1923** – சென்னை மாகாண இரண்டாவது தேர்தலில், நீதிக்கட்சி பெருவாரியான வெற்றி.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900